மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். முறையாக நடவடிக்கை எடுத்து, அரசினுடைய சொத்தை, மாநகராட்சியினுடைய சொத்தை, நம் நாட்டினுடைய சொத்தை நிச்சயமாக மீட்டெடுப்போம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)*

(ஆ) கோவை, அம்மன்குளம், உக்கடம் பகுதிகளில் கட்டப்பட்ட வீட்டு வசதி வாரிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் மண்ணில் புதையுண்டது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எம். ஆறுமுகம், உட்காருங்கள். *(குறுக்கீடு)* Please sit down. இன்றைக்கு மானியக் கோரிக்கைகள் இருக்கின்றன. 12 மாண்புமிகு உறுப்பினர்கள் பேச வேண்டும்; மாண்புமிகு அமைச்சர்களுடைய பதிலுரைகள் இருக்கின்றன. இன்றைக்கு ஒரேயொரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தை மட்டும் எடுத்துக்கொள்கிறேன். இயற்கைத் துறைமுகமும் தென்னிந்தியாவின் வளர்ச்சிக்கு... *(குறுக்கீடு)* அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள், அது என் ஆய்வில் இருக்கின்றது. *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள் பேசிவிடட்டும். மாண்புமிகு உறுப்பினர் மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள் தயவுசெய்து அமருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம், சுருக்கமாகப் பேசுங்கள். அமைச்சரிடம் இதற்கு பதில் உள்ளது.

முற்பகல் 11-20

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், கோவை மாநகரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் அம்மன்குளம் பகுதியில் சில வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட அடுக்கு மாடிக் குடியிருப்புகள் “பி” பிளாக் 144 வீடுகள் அடங்கிய 6 மாடிக் குடியிருப்பு திடீரென மண்ணில் புதையத் தொடங்கியுள்ளது. தரைத் தளத்தில் சுவர்கள் உடைந்து நொறுங்கியுள்ளது.

கான்கிரீட் கம்பிகள் வளைந்து "எஸ்" வடிவத்தில் சின்னாபின்னமாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றன. நேற்றையதினம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே சென்று பார்வையிட்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே கட்டப்பட்டிருக்கக்கூடிய இப்படிப்பட்ட பல அடுக்குமாடி வீடுகள் இடிந்து நொறுங்கக்கூடிய நிலையில் உள்ளன. அவற்றில் குடியேறினால் மக்கள் பாதிக்கப்படுவார்கள். எனவே, அந்தக் குடியிருப்புகளைக் கட்டிய அதிகாரிகள்மீது, கடந்த ஆட்சியின் பொறுப்பானவர்கள்மீது அரசு நடவடிக்கை எடுக்குமா, விசாரணைக் கமிஷன் அமைக்கப்படுமா எனக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. மலரவன் அவர்கள்.*

திரு. தா. மலரவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்து, கடந்த கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே போடப்பட்ட திட்டங்கள் அனைத்தும் மக்களுக்குப் பயன்படாதவகையில், அவர்களுக்கு மட்டுமே பயன்படக்கூடிய வகையில் போடப்பட்டவை. ஏனென்று சொன்னால், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் அந்த அம்மன்குளத்திலும், உக்கடத்திலும் மண் பரிசோதனை செய்த நேரத்தில் அது அடுக்கு மாடிக் குடியிருப்புகள் கட்டுவதற்கு ஏற்றதல்ல என்று அவர்கள் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். ஆனால், அதையும் மீறி மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் அம்மன்குளத்திலே, 40 கோடி ரூபாய் செலவில் கட்டினார்கள். அவை பூமியிலே புதைந்தன. அதேபோல, உக்கடத்திலே கட்டியிருக்கக்கூடிய வீடுகளும் 76 கோடி ரூபாயிலே கட்டப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு அந்தக் குடியிருப்புகளும் பூமிக்கடியிலே புதைந்து விட்டன. ஆகவே, நாட்டு மக்களுடைய வரிப் பணம் ஏறத்தாழ 116 கோடி ரூபாய் இன்றைக்கு பூமிக்கடியிலே இருக்கின்றது என்று சொன்னால் அதற்கு யார் காரணமானவர்கள் என்பதைக் கண்டுபிடித்து அவர்களை மக்கள் மன்றத்திலே நிறுத்த வேண்டும். அது மட்டுமல்லாமல், இன்றைக்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த நாட்டைக் காப்பாற்ற*

வேண்டும், நம்மைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக கருணாநிதி கட்டிய அந்தச் சட்டமன்றத்தை விட்டுவிட்டு, புனித ஜார்ஜ் கோட்டைக்குச் சட்டமன்றத்தைக் கொண்டு வந்தார்கள் என்று சொன்னால், அதுவும் ஒருகாலத்திலே இடிந்து விழக்கூடிய தருவாயில் இருக்கிறது என்கிற காரணத்தினால்தான் என்பதை நான் தெரிவித்து, அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள். சுருக்கமாகச் சொல்லுங்கள். இதே பிரச்சினை குறித்துதானே பேசப் போகிறீர்கள்?

திரு. கே. தங்கவேல்: இல்லை. கோவை மாவட்டம், திருப்பூரிலே, ஜவுளி. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அடுக்கு மாடிக் குடியிருப்புகள் புதைந்து பிரச்சினைதான் தற்போது எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. Please sit down. மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த தி.மு.க. ஆட்சியில் 2008 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு உக்கடம் பகுதியில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அம்மன்குளம் என்று சொன்னார்கள். கடந்த தி.மு.க. ஆட்சியில் ஒரு வருடத்திற்கு முன்னால் அம்மன்குளத்தில் இதுபோல் நிகழ்வுகள் ஏற்பட்டு அதில் குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். 2, 3 தினங்களுக்கு முன்னால் உக்கடம் பகுதியில் நடந்தது இது 15 ஏக்கர் நிலப்பரப்பில் கிட்டத்தட்ட 2,232 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டன. அதனுடைய மதிப்பு 76.34 கோடி ரூபாய். அதில் 144 குடியிருப்புகள் உள்ளடக்கிய பிளாக் 4, 15 சென்டிமீட்டர் ஆழத்திற்குப் புதைந்து விட்டது. இதனுடைய மதிப்பு 4.32 கோடி ரூபாய். இதைக் கேள்விப்பட்டவுடன் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அங்கே சென்று அந்த நிகழ்வுகள் எப்படி நடந்தன என ஆய்வு செய்து வரும்படி ஆணையிட்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையை ஏற்று நானும், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை செயலாளர், குடிசை மாற்று வாரிய

2011 செப்டம்பர் 7] *[திரு. ஆர். வைத்திலிங்கம்]*

மேலாண்மை இயக்குநர் ஆகிய மூன்று பேரும் சென்று ஆய்வு செய்தோம். அம்மன்குளம் பகுதியிலும், ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதியிலும், உக்கடம் பகுதியிலும் 2008-ல் குடிசை மாற்று வாரிய வீடுகள் ஜவஹர்லால் நேரு தேசிய புனரமைப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட அத்தனை வீடுகளும் அவர்களுடைய அலட்சியப் போக்கால், ஆளுமைத் திறமையின்மையால் இன்றைக்கு எல்லா கட்டடங்களும் சோதனை செய்ய வேண்டிய நிலைமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றன. அந்த 144 குடியிருப்புகளுக்கான கட்டடங்களைப் பார்த்தபொழுது 15 செ.மீ., 20 செ.மீ. அளவிற்கு உள்ளே உட்கார்ந்துவிட்டன. அதை அம்மா அவர்களிடம் தெரிவித்து, அம்மாவின் அனுமதி பெற்று கட்டட வடிவமைப்பு மற்றும் மண்ணியல் துறை வல்லுநர்களைக்கொண்டு, பொறியாளர் வல்லுநர் குழு அமைக்கப்பட்டு, ஆய்வு நடத்தி, அதனுடைய அறிக்கையைப் பெற்று, மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும். தி.மு.க. ஆட்சியில் 15, 20 அதிகார மையங்கள் எதை முதலில் கைப்பற்றிக் கொள்வது என்று அவசர, அவசரமாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, திறமையில்லாத ஒப்பந்தக்காரர்களிடம் கொடுத்ததால் இதுபோன்ற நிகழ்வுகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11-25

இங்கே காலையிலே வந்தார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு வணக்கம் வைத்தார்கள். ஓடினார்கள். வரலாற்றில் மாவீரன் அலெக்சாண்டரை சொல்வார்கள். வந்தான்; வென்றான்; சென்றான் என்று. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த ஆட்சியில் எங்களையெல்லாம் சஸ்பெண்ட் செய்தபொழுது, தன்னந்தனியாளாக சட்டசபைக்கு வந்தார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) வாதத்தை எடுத்து வைத்தார்கள். முதலமைச்சர் கருணாநிதி கோப்புகளை இவ்வளவு உயரம் வைத்து ஒளிந்து கொண்டார். அம்மா பேசியபொழுது கூக்குரல் இட்டார்கள். அம்மா, தன் வாதத் திறமையால், வந்தார்; வென்றார்; சென்றார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் இவர்கள் வந்தார்கள்; மாண்புமிகு பேரவைத் தலைவரை வணங்கினார்கள்; ஓடினார்கள்.

1952-ல் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் நடித்த முதல் திரைப்படம் பராசக்தி. அதற்கு கருணாநிதி 'ஓடினாள்,

ஓடினாள், வாழ்க்கையின் ஓரத்திற்கே ஓடினாள்; (மேசையைத் தட்டும் ஒலி) விட்டதா இந்தச் சமுதாயம்' என்று கதை வசனம் எழுதினார். அதுபோல அவர்கள், ஓடுகிறார்கள், ஓடுகிறார்கள், ஓடிக்கொண்டே இருக்கிறார்கள். அம்மா விடமாட்டார்கள், பிடித்துச் சிறையில் அடைப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோல் இந்தத் தவறுகள் செய்தவர்களையும், விசாரணை செய்து, தவறுகள் செய்தவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகப் மாண்புமிகு பேரவை உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இயற்கைத் துறைமுகமும், தென்னிந்தியாவின் வளர்ச்சிக்கு மிக முக்கியமானதாகவும் விளங்கும் (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள், இன்றைக்கு 12 மாண்புமிகு உறுப்பினர்கள் பேசவேண்டும். மானியங்கள் எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும். இப்பொழுது நேரம் 11 மணி 27 நிமிடங்கள் ஆகின்றன. நீங்கள் கொடுத்த அந்த சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பு எல்லாம் கவனத்தில் கொள்ளப்படும். நாளை பார்க்கலாம் (குறுக்கீடு) நாளை பார்த்துக்கொள்ளலாம்.

4. சிறப்புக் கவன ஈர்ப்பு

குளச்சல் துறைமுகத்தை சர்வதேசத் தரம் வாய்ந்த துறைமுகமாக்க அரசை வலியுறுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இயற்கைத் துறைமுகமும், தென்னிந்தியாவின் வளர்ச்சிக்கு மிக முக்கியமானதாகவும் விளங்கும் குளச்சல் துறைமுகத்தை சர்வதேசத் தரம் வாய்ந்த வர்த்தகத் துறைமுகமாக்க தமிழக அரசு மத்திய அரசை வலியுறுத்த வேண்டியது குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள் சட்டமன்றப் பேரவை விதி 55-ன்கீழ் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர் சுருக்கமாக, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.